**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 160 of 2022 |
| Prosecution Witness | : | PW3 |

04.08.2025.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரியா | Calling | : | கூலிவேலை |
| Spouse Name | : | பிரபாகரன் | Religion | : | |
| Village | : | ஜம்புமடை | Age | : | 39 |
| Taluk | : | முசிறி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது வழக்கறிஞர் ஆ.ஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜம்புமடையில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1ம், அ.சா.2ம் எனது மாமனார், மாமியார் ஆவார்கள். 1வது எதிரி கொழுந்தனார், 2 வது எதிரி கொழுந்தனாரின் மனைவி. 3 வது எதிரி, 2 வது எதிரியின் அம்மா. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு 09.30 மணிக்கு 1வது எதிரி எனது மாமியாரை அடித்துவிட்டார். அ.சா.1ன் வீட்டிற்கு அருகில் எங்களது வீடு உள்ளது. எனது மாமியாரை அடிக்கிற சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். 1 முதல் 3 எதிரிகள் எனது மாமியாரை கையால் அடித்தார்கள். 1வது எதிரி எனது மாமியாரை இடது கையை முறுக்கி திருப்பி அடித்ததில் அவருக்கு இடது கை மூட்டு நழுவிவிட்டது. 1வது எதிரி எனது மாமனாரை கீழே தள்ளி அடித்தார். நான் சண்டையை விலக்கிவிட்டு நான் சென்றுவிட்டேன். எனது மாமனார், மாமியார் முசிறி அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்காக சென்றார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எனது மாமனார், மாமியார் எங்களுக்கும், 1வது எதிரிக்கும் நிலத்தை சமமாக பிரித்து கொடுத்தார்கள். அவர்களுக்கு ஒரு ஏக்கர் நிலத்தை அவர்களுக்கு பராமரிப்புக்கு வைத்துக்கொண்டு மற்ற நிலத்தை பிரித்துக் கொடுத்தார்கள். அதில் 50 செண்டை எனது மாமியார் எனது பெயருக்கு எழுதி வைத்தார். 2வது எதிரியை எனது மாமனார், மாமியார் அடித்தார்கள் என்று 2வது எதிரி தா.பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அங்கு விசாரணைக்கு சென்றார்கள். மேற்படி சம்பவத்தில் 2வது எதிரி விஷம் அருந்திவிட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி விசாரணையில் எனது மாமனார், மாமியார் எதிரிகளிடம் எந்த பிரச்சனையும் செய்ய மாட்டோம் என்று எழுதிக்கொடுத்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. சம்பவத்தன்று நானும், எனது கணவரும் ஜம்புமடையில் தனியாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது கணவர் பிரபாகர் லாரிக்கு சென்றுவிட்டார். சம்பவத்தின்போது, நாங்கள் தோட்டத்தில் மாமியாருடன் குடியிருக்கவில்லை என்றும், அதனால் சம்பவம் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 160 of 2022 |
| Prosecution Witness | : | PW4 |

04.08.2025.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ராஜ் | Calling | : | விவசாயம் |
| Father Name | : பெருமாள் | Religion | : | |
| Village | : ஜம்புமடை | Age | : | 70 |
| Taluk | : முசிறி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜம்புமடையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரிகளையும் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 160 of 2022 |
| Prosecution Witness | : | PW5 |

04.08.2025.

| | | | |
|---|---|---|---|
| Name | : பானுமதி | Calling | : விவசாயம் |
| Father Name | : ராஜ் | Religion | : |
| Village | : ஜம்புமடை | Age | : 55 |
| Taluk | : முசிறி | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜம்புமடையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரிகளையும் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,

நீதித்துறை நடுவர், துறையூர்